# அனிமேஷன் கதை, திரைக்கதை அமைப்பு - ஓர் ஆய்வு

**அந்தோனி கிம்டன் பிரபு**
உதவிப் பேராசிரியர்
காட்சி ஊடகத் தகவல்துறை
VISTAS, சென்னை

**பா. செந்தில்குமார்**
உதவிப் பேராசிரியர்
காட்சி ஊடகத் தகவல்துறை
VISTAS, சென்னை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

பொதுவாகத் திரைப்படம், அனிமேஷன் தயாரிப்பானது மூன்று நிலைகளை உடையது. அவை தயாரிப்புக்குமுன், தயாரிப்பு, தயாரிப்புக்குப்பின் ஆகும். சினிமா நிகழ்ச்சிகளைப் பொருத்தமட்டில் தயாரிப்புக்கும் முந்தைய நிலையில் கதை, திரைக்கதை அமைப்பு, நிதியேற்பாடு செய்தல், கலைஞர்களை ஒப்பந்தம் செய்தல், இசையமைப்பாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், கேமராமேன் ஆகியோரை ஒப்பந்தம் செய்தல், படம் பிடிக்கப்பயன்படும் இடங்கள் ஆகியவற்றை முடிவு செய்தல் முதலியவற்றைக் குறிக்கின்றன. தயாரிப்பு எனப்படுவது எழுதப்பட்ட கதையைப் படம் பிடித்தலைக் குறிக்கிறது. நடிகர் நடிகைகள் கதையை நடிக்கும்போது அவற்றைக் கேமராமேன்மூலம் பதிவு செய்வதே தயாரிப்பு நிலை எனப்படுகிறது. தயாரிப்புக்குப்பின் எனப்படுவது எடுக்கப்பட்ட படச்சுருளை வெட்டியோ, ஒட்டியோ, கதையைத் தெளிவாக புரியும்படி இரசிக்கும்படி, இசை சேர்ப்பு, பின்னணி பாடல் இணைப்பு, தலைப்பு ஆகியவற்றை இணைத்தல் ஆகும். தற்காலத்தில் கணினி தொழில்நுட்பங்கள் தயாரிப்புப் பிந்தைய நிலையில் பெரிதும் பயன்படுகின்றன.

அனிமேஷன் துறையைப் பொருத்தமட்டில் கதை, திரைக்கதை, நிதி இவை தயாரிப்பைக் குறிக்கிறது. தயாரிப்புநிலையில் கதையை, அதன் கதாபாத்திரங்களைக் கைகளாலோ, கணினியாலோ அதன் பரிமாணங்களை (Top, Side, Front view) வரைந்து ஸ்கேன் செய்வதில் ஆரம்பித்து கணினி மூலம் அனிமேஷனுக்கு உரிய மாடலாக மாற்றுவதில் தொடங்குகிறது. இதற்கு முன்பு கைகளால் வரைந்த ஓவியங்களை, களிமண்ணால் சிற்பமாக்கி அவற்றின் அசைவுகளை ஆராய்வதும் அனிமேஷன் துறையில் அவசியமாகிறது. கற்பனைப் பாத்திரங்களின் முப்பரிமாணத் தோற்றத்தைக் காண்பதற்கு களிமண் சிற்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தயாரிப்புக்குப்பின் எனப்படுவது படத்தொகுப்பு, சிறப்பு காட்சி, இசை சேர்ப்பது தலைப்பு சேர்ப்பது ஆகியவற்றைக் குறிக்கிறது. சினிமாத்துறையில் 35-அஅ பிலிம்கள் பயன்படுத்தபபடுகின்றன. தொலைக்காட்சி மற்றும் அனிமேஷனில் மின்னணு நாடா மற்றும் கணினி மென்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. அனிமேஷனில் தயாரிப்புக்குப் பிந்தைய மென்பொருட்களை மாயா, சாப்ட் இமேஜ், 3-D Studio max, Cinema 4-D, Flame, Combustion, After effects, Premier pro, Edit, Final cut Pro போன்றவை பயன்படுகின்றன.

**திரைக்கதை எழுதும் முறை**

திரைப்படத்திற்கோ, தொலைக்காட்சிக்கோ, அனிமேஷன் படத்திற்கோ திரைக்கதை எழுதும் முன்பு, எந்த வகையான பார்வையாளர்களைக் குறியாக வைத்து எழுதுகிறோம் என்பதில் தெளிவாக இருக்கவேண்டும். பொதுவாக அனிமேஷன் படங்கள் சிறுவர் சிறுமியரை, இளைஞர்களைக் குறியாக வைத்து எடுக்கப்படுகின்றன அதற்கு தகுந்தார்போன்ற கதைகளைத் தேர்வுசெய்வது அவசியமாகிறது. தமிழகத்தில் மரபுசார்ந்த சிறுகதைகள், இலக்கியங்கள், புராணங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை உரியவரின் அனுமதிபெற்று அனிமேஷன் படங்களாகத் தயாரிக்கலாம். நிறைய தொலைக்காட்சிகள் தற்போது நிகழ்ச்சிகளை எதிர்பார்த்து இருப்பதால் வாய்ப்புகள் ஏராளம்.

**கதை**

ஆர்வத்தினால் புதிய கதைகளை உருவாக்கவும் இயலும். பின்வரும் கதையைக் கவனித்தால் அது புதியதாகவும், அதிலுள்ள பாத்திரங்களைக் கேள்விபட்டதாகவும் இருப்பதைக் காண முடியும். அப்படியே நதலெடுக்காமல் உண்மையாக, நேர்மையாக கதைகள் தயாரிக்கப்பட்டால் அவை பெரிய வெற்றி பெறும். ஒரு கலைஞனுடைய கதையையோ, கவிதையையோ எழுத்துக்களையோ அவனுடைய அனுமதி இல்லாமல் பயன்படுத்துவது பொருளைப் பகிரங்கமாக அபகரிப்பதற்கு சமமாகும். ஆனால் சிலநேரங்களில் இரு கலைஞர்களுடைய சிந்தனை ஒரேதிசையில் அமைந்துவிடும். இது எதிர்பாராதது. நல்ல கதைகள் மக்களைச் சேராமல் போனாலும் அவை நிச்சயம் நிலைத்து நிற்கும்.

**கட்டங்கள்**

(i) முதலில் கசைத்சுருக்கம் எழுதவேண்டும். கதைச்சுருக்கம் என்பது மிகச்சிறியதாக நான்கு அல்லது ஐந்து வரிகளில் சுருக்கமாக இருக்கவேண்டும்.
(ii) பின்னர் ஒன்று அல்லது இரண்டு பக்கங்களில் கதையை எழுதவேண்டும்.
(iii) கதையின் நிகழ்வுகளை ஒவ்வொரு வரியாக எழுதிட வேண்டும். இதுவே One line Order எனப்படும்.
(iv) தெளிவான திரைக்கதையாக காட்சிகளைக் கேமரா கோணங்களுடன் எழுதிடவேண்டும்.

உதாரணமாக கீழ் உள்ளவாறு திரைக்கதை அமைப்பு இருக்கவேண்டும்.

**கதைச்சுருக்கம்**

காட்டுராஜாவான சிங்கத்திடம் தோல்வியடைந்த மற்ற சிங்கங்கள் நரியின் தந்திரத்தோடு பல வருடங்கள் காத்திருக்கின்றன. சிங்கத்துக்கு வயதான தளர்வான நேரத்தில் அவை மற்ற சிங்கங்களின் துணையோடு அதனைத் தாக்க வருகின்றன. வயதானாலும் சிங்கம் கம்பீரமாக சண்டைக்கு தயாராவதை கண்டு சண்டை செய்ய முயன்ற மற்ற சிங்கங்கள் காட்டிலிருந்து ஓடுகின்றன.

**கதையின் கருத்து**

“வெற்றி எப்போதும் உடல் பலத்தாலோ ஆயுத பலத்தாலோ மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. மாறாக மனவலிமையில்” என்பதே இக்கதையின் கருத்து ஆகும்.

**ஒரு வரி நிரல்**

(i) இளம் சிங்கம் ஒன்று மற்ற சிங்கங்களுடன் சண்டை செய்து வெற்றிபெறுவது.
(ii) தோல்வியடைந்த சிங்கங்கள் நரிகளின் உதவியுடன் ஆலோசனை நடத்துகின்றன.
(iii) இளம் சிங்கம் அனைவராலும் காட்டின் மகாராஜாவாக அங்கீகரிக்கப்படுகிறது. சந்தோசமாக வாழ்கிறது.
(iv) வருடங்கள் ஓடுகின்றன. காட்டு ராஜாவுக்கு குட்டி பேரன்கள் பிறக்கின்றன.
(v) வயதானாலும் அந்தச் சிங்கத்தை அனைவரும் மதித்து நடக்கின்றன.
(vi) சற்றுதளர்வானநிலையில் முன்பு தோல்வியடைந்த சிங்கங்கள் நரிகளின் ஆலோசனைப்படி ராஜாவின் குகையை அடைகின்றன, சண்டை செய்ய அழைக்கின்றன.
(vii) சிங்கத்தின் குடும்பத்தினர் அஞ்சி நடுங்கி நாம் காட்டைவிட்டு விலகிச் சென்றுவிடலாம் என ராஜாவிடம் கூறுகின்றன.
(viii) ராஜா சற்றும் அஞ்சாமல் வெளியேவந்து கர்ஜனை செய்கிறது.

(ix) முன்பு தோற்றோடிய சிங்கங்கள் ‘தங்களது நினைவுகளை அசைப் போடுகின்றன. பயத்தின் காரணமாக ஓடுகின்றன.

(x) மீண்டும் சிங்கங்களின் ராஜா கம்பீரத்தோடு காட்டை வலம் வருகிறது. அது வாழும்வரை ராஜாவுக்கு ராஜாவாக வாழ்கிறது.

**கதை**

இளஞ்சிங்கம் ஒன்று மற்ற சிங்கங்களை வென்று காட்டிற்கு ராஜாவாக அங்கீகாரம் பெறுகிறது. அதனிடம் தோல்வியடைந்த சிங்கங்கள் நரிகளின் யோசனைப்படி பல ஆண்டுகள் காத்திருந்து மற்ற இளம் சிங்கங்களுடன் கூட்டுச் சேர்ந்து வயதான காட்டுராஜாவினை சண்டைச் செய்ய அழைக்கின்றன. இப்போது குட்டிகளுடன், பேரன்களுடனும் இருக்கும் பெரிய சிங்கத்தை அனைவரும் காட்டைவிட்டு விலகிச் சென்றுவிடலாம் எனப் பயத்துடன் கூறுகின்றன. ஆனால் காட்டுராஜா தனது கம்பீரம் மாறாமல் சிறிதும் அச்சமின்றி வெளியேவந்து தனது கரங்களை மார்பின்மீது அடித்தபடி பெரிய கர்ஜனையுடன் எதிரிகளை நோக்கி பார்க்கிறது. முன்பே அதனுடன் சண்டையிட்டு தோற்றோடிய அனைத்து சிங்கங்களும் தங்களது பழைய நிலையை நினைத்துப் பார்க்கின்றன. சண்டை செய்யாமலேயே அவ்விடத்தைவிட்டு ஓட்டம் எடுக்கின்றன.

சிங்கங்களுக்கெல்லாம் சிங்கமாக காட்சியளித்த காட்டுராஜா தனது மகனிடம் கீழ்கண்டவாறு கூறுகிறது.

‘உடல் பலம் மட்டுமே வெற்றி பெற காரணமாகாது மனவலிமையே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும்’ நீங்கள் எப்போதும் ராஜாவாகவே வாழுங்கள். அஞ்சாதீர்கள்!

இக்கதையின் தலைப்பு ராஜாவின் ராஜா என்று கூறலாம். இது அதிகம் கேள்விப்பட்டதாக இருப்பின் சிங்கத்தின் சிங்கம் எனவும் வைத்துக்கொள்ளலாம். இக்கதையானது சிங்கராஜா என்ற அனிமேஷன் படத்தின் தாக்கம் என்று கூறலாம். நிச்சயமாக நகல் அல்ல.